# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2263/37 - 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2022.01.21

*2263/37 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமத்திய மாகாண மாகாண சபை**

*வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பணிப்புரையாகும்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
வடமத்திய மாகாணம்,
மாகாண சபைக் கட்டிடம்,
தர்மபால மாவத்தை,
அநுராதபுரம்,
2022, சனவரி 21.

**பணிப்புரை**

*வடமத்திய மாகாணத்துக்குரிய மதவாச்சி பிரதேச சபைத் தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க*


1A-PG 5724 - 15 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்து, அது நிறைவேற்றாமையினால் மற்றும் 169 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2021.12.31 ஆந் திகதியிலிருந்து தலைவராகிய ஹேரத்ஹாமிகே சேனாரத்ன என்பவர் அப்பதவியிலிருந்து கேட்டு விலகியதாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த சபையின் தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளதாகக் கருதப்பட வேண்டும்.*

EOG 01-0224/1

---

**வடமத்திய மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், பின்வரும் பணிப்புரைகளை அறியத்தருகிறேன்.*

**மஹீபால ஹேரத்,**
*ஆளுநர்,*
*வடமத்திய மாகாணம்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*வடமத்திய மாகாணம்,*
*மாகாண சபைக் கட்டிடம்,*
*தர்மபால மாவத்தை,*
*அநுராதபுரம்,*
*2022, சனவரி 21.*

**பணிப்புரை**

*வடமத்திய மாகாணத்துக்குரிய அநுராதபுர மாவட்ட எல்லைக்குட்பட்ட மதவாச்சி பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி மன்ற (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகள் பிரகாரம் நிறைவேற்றத் தவறியமையினால் மதவாச்சி பிரதேச சபையின் தலைவரது பதவி அதன் 169 ஆம் பிரிவின்படி வெற்றிடமாவதால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் (திருத்தப்பட்ட) சட்டப்படி அந்த வெற்றிடத்தை நிரப்பும் வரை தலைவரது பதவி வெற்றிடமாகிய திகதியிலிருந்து அப்பதவியின் தத்துவங்கள், கருமங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செய்தல் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு அளிப்பதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

*மேலும், தெரிவாகும் புதிய தலைவரினால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைச் சபைக்குச் சமர்ப்பித்து உரிய முறைப்படி நிறைவேற்றும் வரையான காலப்பகுதிக்கு மதவாச்சி பிரதேச சபையின் கருமங்கள் தொடர்ந்து கொண்டு நடாத்துவதை உறுதிப்படுத்த மதவாச்சி பிரதேச சபையின் செயலாளரினால் தயாரித்து அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் மதவாச்சி பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான மீண்டுவரும் செலவு மற்றும் தற்போது செயற்படுத்தியுள்ள விசேட கருத்திட்டங்களுக்கான அத்தியாவசிய செலவுகளைச் செய்திட நான் மதவாச்சி பிரதேச சபையின் உப தலைவருக்கு இத்தால் பணிப்புரை செய்கிறேன்.*

EOG 01-0224/2

**வடமத்திய மாகாண மாகாண சபை**

*வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பணிப்புரையாகும்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

*ஆளுநர் அலுவலகம்,*
*வடமத்திய மாகாணம்,*
*மாகாண சபைக் கட்டிடம்,*
*தர்மபால மாவத்தை,*
*அநுராதபுரம்,*
*2022, சனவரி 21.*

**பணிப்புரை**

*வடமத்திய மாகாணத்துக்குரிய திம்புலாகல பிரதேச சபைத் தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்து, அது நிறைவேற்றாமையினால் மற்றும் 169 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2021.12.31 ஆந் திகதியிலிருந்து தலைவராகிய ஜயந்த மாரசிங்ஹ என்பவர் அப்பதவியிலிருந்து கேட்டு விலகியதாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த சபையின் தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளதாகக் கருதப்பட வேண்டும்.*

EOG 01-0224/3

---

**வடமத்திய மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், பின்வரும் பணிப்புரைகளை அறியத்தருகிறேன்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

*ஆளுநர் அலுவலகம்,*
*வடமத்திய மாகாணம்,*
*மாகாண சபைக் கட்டிடம்,*
*தர்மபால மாவத்தை,*
*அநுராதபுரம்,*
*2022, சனவரி 21.*

**பணிப்புரை**

*வடமத்திய மாகாணத்துக்குரிய, பொலன்னறுவை மாவட்ட எல்லைக்குட்பட்ட திம்புலாகல பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி மன்ற (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகள் பிரகாரம் நிறைவேற்றத் தவறியமையினால் திம்புலாகல பிரதேச சபையின் தலைவரது பதவி அதன் 169 ஆம் பிரிவின்படி வெற்றிடமாவதால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் (திருத்தப்பட்ட) சட்டப்படி அந்த வெற்றிடத்தை நிரப்பும் வரை தலைவரது பதவி வெற்றிடமாகிய திகதியிலிருந்து அப்பதவியின் தத்துவங்கள், கருமங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செய்தல் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு அளிப்பதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

*மேலும், தெரிவாகும் புதிய தலைவரினால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைச் சபைக்குச் சமர்ப்பித்து உரிய முறைப்படி நிறைவேற்றும் வரையான காலப்பகுதிக்கு திம்புலாகல பிரதேச சபையின் கருமங்கள் தொடர்ந்து கொண்டு நடாத்துவதை உறுதிப்படுத்த திம்புலாகல பிரதேச சபையின் செயலாளரினால் தயாரித்து பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் திம்புலாகல பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான மீண்டுவரும் செலவு மற்றும் தற்போது செயற்படுத்தியுள்ள விசேட கருத்திட்டங்களுக்கான அத்தியாவசிய செலவுகளைச் செய்திட நான் திம்புலாகல பிரதேச சபையின் உப தலைவருக்கு இத்தால் பணிப்புரை செய்கிறேன்.*

EOG 01-0224/4

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*